செ.வெ.எண்: 15/பிப்ரவரி நாள்: 09.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**
**மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசுகையில்,

மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு நலத்திட்டங்கள் அனைத்தும் சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு இந்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்று வருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு மருத்துவ சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை அனைத்தும் சிறந்த முறையில் வழங்குவதற்கும், மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் பிற துறைகளின் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதில் ஏற்படும் சிரமங்களை நீக்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மனநலமருத்துவர் டாக்டர்.பெரியார் லெனின், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.அபுபக்கர் சித்திக், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சி.தங்கவேலு மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான குழு பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**